# யூன் – 25 - பொதுக்கால 12ம் வார ஞாயிறு

**மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக்கொள்பவரை விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக்கொள்வேன் (மத் 10:32)**

## முதல் வாசகம் : எரேமியா 20 : 10 – 13

சுற்றிலும் ஒரே திகில்!" என்று பலரும் பேசிக் கொள்கின்றார்கள்" 'பழிசுமத்துங்கள் வாருங்கள், அவன்மேல் பழி சுமத்துவோம்" என்கிறார்கள். என் நண்பர்கள்கூட என் வீழ்ச்சிக்காகக் காத்திருக்கிறார்கள் "ஒருவேளை அவன் மயங்கிவிடுவான் நாம் அவன்மேல் வெற்றி கொண்டு அவனைப் பழி தீர்த்துக் கொள்ளலாம்" என்கிறார்கள். ஆனால், ஆண்டவர் வலிமை வாய்ந்த வீரரைப் போல என்னோடு இருக்கிறார். எனவே என்னைத் துன்புறுத்துவோர் இடறி விழுவர். அவர்கள் வெற்றிகொள்ள மாட்டார்கள். அவர்கள் விவேகத்தோடு செயல்படவில்லை அவர்களின் அவமானம் என்றும் நிலைத்திருக்கும் அது மறக்கப்படாது. படைகளின் ஆண்டவரே! நேர்மையாளரை சோதித்தறிபவரும் உள்ளுணர்வுகளையும் இதயச் சிந்தனைகளையும் அறிபவரும் நீரே நீர் என் எதிரிகளைப் பழி வாங்குவதை நான் காணவேண்டும் ஏனெனில், என் வழக்கை உம்மிடம் எடுத்துரைத்துள்ளேன். ஆண்டவருக்குப் புகழ் பாடுங்கள் அவரைப் புகழ்ந்தேத்துங்கள் ஏனெனில், அவர் வறியோரின் உயிரைத் தீயோரின் பிடியினின்று விடுவித்தார்.

**பதில்பாடல் :** கடவுளே உமது பேரன்பினால் எனக்குப் பதில்மொழி தாரும்

## இரண்டாம் வாசகம் : உரோமையர் 5 : 12 – 15

சகோதர சகோதரிகளே! ஒரே ஒரு மனிதன் வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது. அதுபோலவே, எல்லா மனிதரும் பாவம் செய்ததால், எல்லா மனிதரையும் சாவு கவ்விக்கொண்டது. திருச்சட்டம் தரப்படுமுன்பும் உலகில் பாவம் இருந்தது ஆனால், சட்டம் இல்லாதபோது அது பாவமாகக் கருதப்படவில்லை. ஆயினும் ஆதாம் முதல் மோசே வரையில் இருந்தவர்கள் ஆதாமைப்போல கடவுளின் கட்டளையை மீறிப் பாவம் செய்யவில்லை எனினும் சாவு அவர்கள்மீதும் ஆட்சி செலுத்திற்று இந்த ஆதாம் வரவிருந்தவருக்கு முன்னடையாளமாய் இருக்கிறார். ஆனால், குற்றத்தின் தன்மை வேறு, அருள்கொடையின் தன்மை வேறு. எவ்வாறெனில், ஒருவர் செய்த குற்றத்தால் பலரும் இறந்தனர். ஆனால் கடவுளின் அருளும் இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனிதரின் வழியாய் வரும் அருள்கொடையும் பலருக்கும் மிகுதியாய்க் கிடைத்தது.

## நற்செய்தி : மத்தேயு 10 : 26 - 33

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: எனவே, அவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஏனெனில் வெளிப்படாதவாறு மூடப்பட்டிருப்பது ஒன்றும் இல்லை அறியமுடியாதவாறு மறைந்திருப்பதும் ஒன்றும் இல்லை. நான் உங்களுக்கு இருளில் சொல்வதை நீங்கள் ஒளியில் கூறுங்கள். காதோடு காதாய்க் கேட்பதை வீட்டின் மேல்தளத்திலிருந்து அறிவியுங்கள். ஆன்மாவைக் கொல்ல இயலாமல். உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள். காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்று கூட உங்கள் தந்தையின் விருப்பமின்றித் தரையில் விழாது. உங்கள் தலைமுடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது. சிட்டுக் குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள். எனவே அஞ்சாதிருங்கள். "மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக்கொள்பவரை விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக்கொள்வேன். மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் எவரையும் விண்ணுலகில் இருக்கிற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன்" என்றார்.

**தியானம்:** யேசு இவ்வுலகிற்கு வர ஆதாமின் பாவம் காரணமாயிற்று. கடவுளின் கட்டளையை மீறியதால் பாவம் இவ்வுலகில் அழையா விருந்தாளியாக நுழைந்தது. மீறுதல் பலவீனமான நேரங்களில்தான் இடம் பெறும். பசியால் வாடுபவனுக்கு உணவைப் பார்க்க ஆசை வருகிறது. பணக்கஷ்ட்டத்தில் இருப்பவனுக்கு பணத்தைப் பார்க்க ஆசை வருகிறது. அதனால் திருட முற்படுகிறார்கள். இங்கே பாவம் புகுந்துகொள்கிறது. எமது பலவீனத்தை தெரிந்து அதனை நாம் கட்டுப்படுத்தாவிட்டால் நாமும் பாவத்தில் வீழ்ந்து விடுவோம். இன்று காம இச்சையினால் சீரளியும் ஆண்கள், பெண்கள் ஏராளம். போதைப் பழக்கத்தால் வாழ்வை அழிப்போர் ஏராளம். தொலைத்தொடர்பு சாதனங்களின் பாவனை பல தற்கொலைகளில் முடிவடைவதைக் காணலாம். எல்லாமே பலவீனமான செயல்கள். இவற்றை வெற்றி கொள்ள வேண்டுமானால் நாம் கடவுளுடன் இணைந்து செயற்பட வேண்டும். அஞ்சாதே நான் உன்னோடு இருக்கிறேன் என்கிறார் யேசு. மலைபோல் துன்பம் வந்தாலும் நாம் நிலை தளராது வாழும் வரத்தை வேண்டுவோம்.